1972 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இது நாட்டிற்கு வருகின்ற பயணிகளுக்குத்தான். எம்.எல்.ஏ.க்கள் அநேகமாக பயணம் போவதில்லை என்று கருதுகிறேன்.

புதிய பேருந்து வழித்தடங்கள்

*233. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ம் ஆண்டில் எந்தெந்த புதிய ரூட்டுகளில் புதிதாக பஸ்கள் விடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விடை @ பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டில் புதிதாக விடப்பட்டு வரும் பஸ் ரூட்டுகளை அறிவிக்க இயலுமா? மாயவரம் தொகுதி மக்களின் சார்பாகவும், தஞ்சை மாவட்டத்து மக்களின் சார்பாகவும் அடிக்கடி மாயவரத்திலிருந்து பஸ்கள் விடப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் சொன்னபோதெல்லாம், பெரும்பாலும் கடலூரிலிருந்து பழனி, கடலூரிலிருந்து மதுரை என்று இப்படித்தான் விட்டுக்கொண்டு வருகிறார்கள். எனவே மாயவரத்தை ஒரு முக்கிய ஊராகக் கருதி, அது ஃபர்ஸ்ட் கிரேட் ஊர் என்ற அடிப்படையிலாவது அங்கே டெப்போ ஏற்படுத்தி அங்கிருந்து பஸ்கள் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டில் புதிதாக விடப்பட்ட பேருந்துகளின் பட்டியல் இங்கு தரப்பட்டிருக்கிறது. 1972-73-ம் ஆண்டைப் பொறுத்தவரையில் இனிமேல்தான் அவைகளையெல்லாம் தருவதற்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாயவரத்திலிருந்து பல்வேறு இடங்களுக்கு விரைவுப் பேருந்துகள் விடப்பட வேண்டுமென்று கேட்கிறார்கள். நல்லவேளையாக அவர் பன்ருட்டியிலிருந்து கோயம்புத்தூர், பன்ருட்டியிலிருந்து மற்ற இடங்களுக்கு என்று சொல்லாமல் விட்டது பாராட்டத் தக்கது. ஆனால் புதிய பஸ்கள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் அவைகளுக்கு இடையிலே உள்ள போக்குவரத்தைக் கணக்கிட்டு அதன்மூலம் புதிய வழித்தடங்களில் அரசாங்கப் போக்குவரத்தை மேற்கொள்கிறோம். உறுப்பினரவர்கள் ஏற்கனவே தெரிவித்த யோசனையை அரசாங்கம் பரிசீலிக்கும்.

@ 498-449-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1972 ஆகஸ்ட் 21

திரு. த. சோணையா : தலைவரவர்களே, துரிதப்போக்குவரத்து வண்டிகள் சிலயிடங்களில் 12 மைல்களுக்கு ஒரு தடவை நின்று செல்கிறது. திருபுவனம் போன்ற 12 மைல்களுக்குள் உள்ள இடங்களில் நிற்காமல் இருக்கிறது. குறைந்த பட்சம் எத்தனை மைல்களுக்கு இடையில் நிற்க வேண்டுமென்ற விதிமுறை இருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அப்படி ஒரு விதிமுறை இருக்கிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட இடத்திலே பயணிகள் அதிக மாகப் பேருந்துகளில் ஏறுவார்கள் என்று கணக்கில் தெரிந்தால் அந்த இடங்களில் அந்த விதிக்கு விலக்காக அங்கே நிறுத்துகின்ற முறை கையாளப் படுகிறது. திருபுவனத்தைப்பற்றி உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். திருபு வனத்தில் எத்தனை பேர் ஏறுகிறார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 17 வழித்தடங்களில் 40 பஸ்கள் விடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த புதிய பஸ்கள் விடப்படும் இடங்களில் நஷ்டம் ஏற்படுகிறது என்று தெரிகிறது. அதற்கு அடிப்படைக் காரணம் ஆம்னி பஸ்கள் தான் என்பது உண்மையா? அப்படியென்றால் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது ? இந்த ஆம்னி பஸ்களைத் தேசிய மயமாக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நம்முடைய விரைவு பேருந்துகள் ஓடும் வழித்தடங்களில் ஆம்னி பஸ்கள் ஓடுவது உண்மை. அவற்றினால் எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்ற விவரம் என்னிடத் தில் இல்லை. ஆனால் நம்முடைய விரைவுப் பேருந்துகளின் மூலம் வாரம் ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் வருவாய் எதிர்பார்க்கிறோம். இப்பொழுது 9 லட்சம் ரூபாய் அளவில் நமக்கு வருமானம் வருகிறது. ஆகவே வருமானம் என்று கணக்கிடும்பொழுது வாரம் ஒன்றுக்கு 1 லட்சம் என்ற கணக்கில் ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய் வருவாய் குறைகிறது என்று சொல்லலாம். தேசியமயமாக்கும் திட்டத்தைப் பற்றிக் கூறினார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 5 ஆண்டுகளில் எல்லாப் பேருந்துகளையும் நாட்டுடை மையாக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆம்னி பஸ்கள் அவை களுக்கு விதிவிலக்கு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், 5 ஆண்டுகளில் பஸ்களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதால் இனிமேல் புதிய வழித்தடங்கள் தனியாருக்குக் கொடுக்கப்படுமா, கொடுக்கப்படாதா? இருக்கும் வழித்தடங்களில் அடிஷனல் பஸ்களை விடுவதற்கு தனியார்களுக்கு அனுமதி கொடுப்பார்களா ?

1972 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் சட்டம் வரும் வரையில் காத்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இப்பொழுது அரசாங்கம் நடத்தக் கூடிய எக்ஸ்பிரஸ் பஸ்களை அதிகம் பயணிகள் பயன்படுத்துகிறார்கள், சென்னை, மதுரை, நாகர்கோயில் போன்ற இடங்களில். ஆம்னி பஸ்கள் சம்பந்தமாக ஹைகோர்ட் கொடுத்த தீர்ப்பு அரசாங்கத்திற்குப் பாதகமாகி விட்டிருக்கிறது. எனவே அதைப் பரிசீலனை செய்து அந்த ஆம்னி பஸ்கள் உண்மையிலேயே எந்த நோக்கத்திற்காக விடப்படுகிறதோ அந்த நோக்கத்திற்கு அப்பால் அவர்கள் விடக்கூடிய நிலையைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருத்து தெரிவித்ததைப்போல உயர்நீதிமன்றம், ஆம்னி பஸ் விடலாம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் முழு விவரம் நமக்கு இன்னும் வரவில்லை. ஆனால் அந்தத் தீர்ப்பிலேயேகூட ஆம்னிபஸ் என்ற நோக்கத்திற்காக அவர்கள் பயன்படுத்தினால் அப்பொழுது தான் விடலாம் என்று உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இருப்பதாகப் பத்திரிகைகளில் நான் பார்த்தேன். அதையே சாதாரண பஸ் மாதிரி பயன் படுத்தினால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு முழு அதிகாரம் இருக்கிறது. எந்தெந்த வகையிலே தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைபற்றி அந்த நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு கிடைத்தவுடன் அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Transport whether there is any proposal to start a new bus route from Nagercoil to Bangalore via Hosur?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அண்மைக் காலத்தில் மைசூர் மாநிலத்தோடு நம்முடைய தமிழ்நாடு ஒரு நல்ல ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறது. வேண்டுமானால் இந்த ரூட் பற்றியும் அவர்களிடத்தில் கலந்து இந்த முயற்சியை மேற்கொள்ளலாம்.